**வடமாகாணக்கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
# Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | 21 | TI | பொருளியல் - I | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|---|---|

சுட்டெண் : ………………………………

## பகுதி I

**அறிவுறுத்தல்கள்**

- ❖ **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலெயே விடை எழுதுக.**
- ❖ **சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**


1) ஒரு நேர்கூற்று தொடர்பான சரியான விளக்கம்.
   A. எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றியதாகும்.
   B. எவ்வாறு இருக்கிறது என்பது பற்றியதாகும்.
   C. எப்போதும் உண்மையானதாகும்.
   D. அவதானிப்பதாலும், அளவிடுவதாலும் சரியானது அல்லது தவறானது என மதிப்பிடக் கூடியதாகும்.

   1) AB  2) BD  3) AC  4) CD  5) BC  (………..)

2) பொருளியல் கருத்தின்படி இலவசப் பண்டங்களைக் குறிக்கும் சிறந்த முறையாவது,
   1) நுகர்வோருக்குப் பூச்சிய விலையில் கிடைக்கும் என்பதாகும்.
   2) அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் என்பதாகும்.
   3) உற்பத்தியில் அருமையான வளங்கள் பயன்படுத்தப்படுவதில்லை என்பதாகும்.
   4) நிலம் அல்லது கடலில் இருந்து நேரடியாகப் பெறப்படுகிறது என்பதாகும்.
   5) நிலையான அமையச் செலவில் உற்பத்தி செய்யப்பட முடியும்.  (………..)

agaram.lk

3) வள ஒதுக்கீட்டில் வினைத்திறனை வெளிப்படுத்தும் புள்ளிகளை இனம்கண்டு குறிப்பிடுக.
   1) A புள்ளியும், B புள்ளியும்.
   2) D புள்ளியும், A புள்ளியும்.
   3) A புள்ளியும், D புள்ளியும்.
   4) D புள்ளியும், C புள்ளியும்.
   5) D புள்ளியும், B புள்ளியும்.




(………..)

4) "விலை முறைமை" தொடர்பாகக் கூறப்படும் பின்வரும் கூற்றுக்களுள் நீர் உடன்படாத கூற்று எது?
   1) சந்தை முறைமையில் இணைப்புப் பொறியாக விலையே காணப்படுகின்றது.
   2) கேள்வி நிரம்பல் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் விலையினூடாக பொருளாதாரத்தில் சரியான வளப்பங்கீடு இடம்பெறுகிறது.
   3) விலை முறைமையின் கீழ் உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் மற்றும் காரணி நிரம்பலாளர்கள் தொடர்பாகச் சமிஞ்ஞைகள் இடம்பெறுகின்றன.
   4) பொருளாதாரத்தில் காணப்படும் அனைத்து நபர்கள் தொடர்பான அறிக்கைப்படுத்தல்கள், சாராம்சப்படுத்தல்கள் மற்றும் அவர்களின் நடத்தைகளை ஆராய்தல் என்பன சந்தைப் பொறிமுறையில் இடம்பெறுகின்றன.
   5) விலையானது ஒரு தூண்டற் கருவியாகத் தொழிற்படுகின்றது.  (………..)

5) கோட்பாட்டு ரீதியில் திட்டமிடல் பொருளாதாரத்தின் அனுகூலமாகக் கொள்ளக் கூடியது.
  1) உற்பத்திக் கோலம் நுகர்வோரது விருப்பத்தேர்வைப் பிரதிபலிப்பதால்.
  2) உற்பத்திமுறை அளவுத்திட்ட விளைவு விதியால் நிர்ணயிக்கப்படுதல்.
  3) சமூகச் செலவு நன்மை அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படல்.
  4) அரசு எப்போதும் சமநிலைப் பாதீட்டைத் தயாரித்தல்.
  5) வள ஒதுக்கீடு நுகர்வோர் கேள்வியினால் துணியப்படல். (……….)

6) "பொருளியல் வாடகை" என்பது.
  1) நிலத்தைப் பயன்படுத்துவதைப் பொருட்டு மேற்கொள்ளப்படும் ஒரு கொடுப்பனவு ஆகும்.
  2) உற்பத்திக் காரணிகளை அவற்றின் தற்போதைய வேலைவாய்ப்பில் தொடர்ந்து வைத்திருக்கும் பொருட்டு செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவு ஆகும்.
  3) அரசாங்க சேவைகளை பயன்படுத்தும் பொருட்டு மத்திய அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவு ஆகும்.
  4) வளங்களின் அமையச் செலவின் பொருட்டு வழங்கப்படும் இழப்பீடு ஆகம்.
  5) உற்பத்திக் காரணிகளை அவற்றின் தற்போதைய வேலையில் வைத்திருக்க அவசியமான கொடுப்பனவை விட மேலதிகமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவாகும். (……….)

7) பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று எது?
  1) A பொருளின் விலை அதிகரிக்க B பொருளின் கேள்வி அதிகரிப்பின் A யும், B யும் பிரதியீட்டுப் பொருட்களாகும்.
  2) X பொருளின் கேள்வி அதிகரிக்க Y பொருளின் கேள்வியும் அதிகரிக்குமாயின் X உம், Y உம் நிரப்புப் பொருட்களாகும்.
  3) ஏனைய காரணிகள் மாறாத போது குறித்த ஒரு பொருளின் விலை குறையும் போது நுகர்வோர் மெய் வருமானம் அதிகரிக்கும்.
  4) தனிநபர்க் கேள்விக் கோட்டின் கிடையச்சுப் பெறுமதிகளைக் கூட்டுவதன் மூலம் சந்தைக் கேள்விக் கோடு பெறப்படும்.
  5) இழிவுப் பொருட்களுக்கான கேள்வியானது புறநடைக் கேள்வியைக் கொண்டுள்ளது. (……….)

agaram.lk

8) ஆதன வளங்கள் எனப்படுபவை யாவை?
  1) உழைப்பு மற்றும் முயற்சியாண்மை.
  2) மூலதன வளம் மற்றும் முயற்சியாண்மை.
  3) இயற்கை வளம் மற்றும் மூலதனம்.
  4) இயற்கை வளம் மற்றும் உழைப்பு.
  5) இயற்கை வளம் மற்றும் முயற்சியாண்மை (……….)

9) பின்வரும் காரணிகளில் கேள்விக்கோட்டை வலப்புறம் நகர்த்துவதற்கு பலப்பாக உள்ள காரணி எது?
  1) குறித்த பண்டத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்படல்.
  2) குறித்த பண்டத்தின் தொடர்புடைய பதிலீட்டுப் பண்டத்தின் விலை குறைவடைதல்.
  3) நிரப்புப் பொருளின் விலை அதிகரித்தல்.
  4) நுகர்வோர் தெரிவின் முன்னுரிமை அதிகரித்துச் செல்லுதல்.
  5) போட்டி நிரம்பல் அதிகரித்தல். (……….)

10) $Qd = 500 - 20\,p$ என்ற கேள்விச் சமன்பாட்டின் அடிப்படையில் எந்த விலையில் நெகிழ்ச்சி முடிவிலியாக இருக்கும்?
  1) 20 ரூபாவில்  2) 25 ரூபாவில்  3) 30 ரூபாவில்
  4) 35 ரூபாவில்  5) 40 ரூபாவில் (……….)

11) ஒரு பண்டத்தின் விலை 10 ரூபாவாகக் காணப்படும் போது அதன் சந்தை வழங்கல் 1000 அலகுகளாகக் காணப்பட்டது. அதன் விலை 20 சதவீதத்தால் அதிகரித்த போது அப்பண்டத்தின் சந்தை வழங்கல் 80 சதவீதத்தால் அதிகரித்தது எனின், குறித்த பண்டத்தின் வழங்கல் சார்பு.
  1) – 3000 + 400 P  2) – 2000 + 400 P  3) – 4000 + 400 P
  4) – 3500 + 400 P  5) – 3000 + 350 P (……….)

12) போட்டிச் சந்தையொன்றின் கேள்விச் சார்பு, நிரம்பல் சார்பு என்பவை பின்வருமாறு,

$Qd = 100 - 10\,P$ $\qquad$ $Qs = -50 + 10\,P$

இவை சார்ந்த பொருளுக்கான விலை 20 ரூபாவாக இருப்பின் இப்பொருளுக்கான சந்தையில்,

1) சமநிலை காணப்படும்.
2) மிகைக்கேள்வி ஏற்பட்டு விலை அதிகரிக்கும்.
3) மிகைக்கேள்வி ஏற்பட்டு விலை குறைவடையும்.
4) மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை அதிகரிக்கும்.
5) மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை குறைவடையும். (………)

13) சந்தையொன்றின் விற்கப்படும் மீனின் விலை மாறாதிருக்க இறைச்சி வகைகளின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டால்,

1) மீனின் கேள்வித் தொகை கூடும்.
2) மீனின் கேள்வி மாறாது.
3) மீனின் கேள்வி கூடும்.
4) மீனின் கேள்வி குறையும்.
5) மீனின் கேள்வித் தொகை குறையும். (………)

14) பண்டமொன்றின் கேள்வியானது விலை நெகிழ்ச்சியுள்ளது எனின்,

1) விலையில் ஏற்படும் மாற்றம் மொத்த வருவாயில் மாற்றத்தை ஏற்படுத்தாது.
2) விலையில் ஏற்படும் வீழ்ச்சியானது நுகர்வோர் செலவிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.
3) விலை குறையும் போது நிறுவனத்தின் மொத்த வருவாய் குறைவடையும்.
4) விலை அதிகரிக்கும் போது நிறுவனத்தின் மொத்த வருவாய் குறைவடையும்.
5) விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பானது கேள்வித் தொகையில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். (………)


15) நிறைபோட்டிச் சந்தையொன்றின் விவசாயப் பண்டமொன்றுக்கான கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு.

$Qd = 120 - 20P$ $\qquad$ $Qs = -40 + 20P$

இப்பண்ட உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் 2 ரூபாவினை மானியத்தின் பின்னரான நுகர்வோன் மிகையின் அளவு யாது?

1) ரூபா 90 2) ரூபா 60 3) ரூபா 112 4) ரூபா 180 5) ரூபா 225 (………)

16) தரப்பட்ட வரைபடத்தின் படி கட்டுப்பாட்டு விலையின் பின்னரான பொருளாதார மிகை இழப்பினையும் நுகர்வோன் மிகை இழப்பினையும் காட்டும் பகுதி யாது?




| | பொருளாதார மிகை இழப்பு | நுகர்வோன் மிகை இழப்பு |
|---|---|---|
| 1) | BA | LM |
| 2) | MR | LK |
| 3) | MR | LM |
| 4) | LK | BA |
| 5) | LM | LK |

(………)

agaram.lk

17) "குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி" என்பது,

1) உள்ளீடு அதிகரிக்கும் போது உள்ளீடு உயர்ந்த அளவில் அதிகரிப்பிலும் பார்க்க வெளியிடு உயர்ந்த அளவில் குறைவடையும்.
2) நிலையான மற்றும் மாறும் காரணிகளை அதிகரிக்கும் போது அவை அதிகரிக்கும் வேகத்தை விட வெளியீடு குறைந்த அளவில் வீழ்ச்சி அடையும்.
3) நிலையான மாறும் காரணிகள் இரண்டையும் அதிகரிக்கும் போது வெளியீடு வீழ்ச்சியடையும்.
4) குறித்த வெளியீட்டில் நிலையான மற்றும் மாறும் காரணிகளை அதிகரிக்கும் அதே நேரத்தில் அக்காரணியின் சராசரி மற்றும் எல்லை உற்பத்தி வீழ்ச்சியடையும்.
5) நிலையான மற்றும் மாறும் காரணிகள் இரண்டையும் அதிகரிக்கும் போது உள்ளீடு அதிகரிக்கும் வேகத்திலும் பார்க்க வெளியீடு உயர்ந்த வேகத்தில் அதிகரிக்கும். (………)

18) "A" என்ற நிறுவனம் 18 வானொலிப் பெட்டிகளை உற்பத்தி செய்த போது அதன் சராசரி மொத்தச் செலவானது 3400 ரூபாவாகக் காணப்பட்டது. அந்நிறுவனம் உற்பத்தியை 19 வானொலிப்பெட்டிகளாக அதிகரித்த போது அதன் சராசரி மொத்தச் செலவானது 3250 ரூபாவாகக் காணப்பட்டது. மேலதிக உற்பத்திக்கான எல்லைச் செலவு யாதாயிருக்கும்?

1) ரூபா 150
2) ரூபா – 150
3) ரூபா 750
4) ரூபா 550
5) ரூபா 850 (………)

19) நிறைபோட்டிச் சந்தையில் காணப்படும் இயல்புகளை இனம் காண்க.

A. குறுங்காலத்தில் சாதாரண இலாபம் மட்டும் நிறுவனங்கள் பெறுகின்றன.
B. நிறுவனமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருளின் கேள்விக்கோடு பொருட்களின் அளவினைக் காட்டும் அச்சுக்கு சமாந்தரமாக அமையும் கிடைக்கோடாகும்.
C. தனிப்பட்ட நிறுவனங்களின் பொருட்களுக்கு ஏற்படும் நுகர்வோன் இணைப்பு விளம்பரப்படுத்தலினால் ஏற்படுகின்றது.
D. இச்சந்தையில் புதிய நிறுவனங்கள் சேர்வதற்குத் தடைகள் இல்லை.
E. இச்சந்தையில் நிறுவனங்களின் எண்ணிக்கை ஒரு சில நிறுவனங்களின் எண்ணிக்கையிலிருந்து கூடிய எண்ணிக்கையுடைய நிறுவனங்கள் வரையாக உள்ளது.

1) ABC 2) ADE 3) BDE 4) ACD 5) ACE (………)

agaram.lk

20) குறுங்கால உற்பத்திச் செயற்பாடொன்றின் போது சராசரி மாறும் செலவு ஆகக்குறைந்த மட்டத்தைக் கொண்ட உற்பத்தி மட்டத்திற்கு மேலாக மேலும் உற்பத்தியை அதிகரிக்குமாயின்,

| | எல்லைச் செலவு (mc) | சராசரி மாறும் செலவு (Avc) | சராசரி நிலையான செலவு (AFC) |
|---|---|---|---|
| 1) | குறைவடையும் | குறைவடையும் | குறைவடையும் |
| 2) | அதிகரிக்கும் | குறைவடையும் | குறைவடையும் |
| 3) | அதிகரிக்கும் | குறைவடையும் | அதிகரிக்கும் |
| 4) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | குறைவடையும் |
| 5) | குறைவடையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும். |

(………)

21) வர்த்தக சகடவோட்டமொன்றின் விரிவாக்கக் கட்டத்தில் பின்வருவனவற்றில் எது பெரும்பாலும் நிகழக்கூடும்?

1) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கு் அதேவேளை வேலையின்மை வீழ்ச்சியடையும்.
2) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி, வேலையின்மை என்பன அதிகரிக்கும்.
3) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி உற்பத்தி குறைவடையும் அதேவேளை பணவீக்கம் உயரும்.
4) வட்டி வீதங்கள் உயர்வடையும் அதேவேளை வேலையின்மை அதிகரிக்கும்.
5) பணவீக்கம் உயர்வடையும் அதேவேளை தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். (………)

22) திறந்த பொருளாதாரம் ஒன்றின் மொத்த நிரம்பலில் உள்ளடங்கும் விடயங்கள் எவை?


1) As = C + S + T
2) As = C + I + G
3) E = C + I + G + Nx
4) Y = C + I + G
5) E = As (………)

23) அரச செலவீட்டில் ஒரு குறைவு ஏற்படுகின்ற போதிலும் தேசிய வருமானத்தில் எத்தகைய ஒரு வீழ்ச்சியும் ஏற்படாதிருக்க வேண்டுமாயின் அங்கே அதிகரிக்க வேண்டியது?

A. ஏற்றுமதிகள்
B. வரிவிதிப்பு
C. முதலீடு

1) A யும் B யும் 2) A யும் C யும் 3) B யும் C யும்
4) A மட்டும் 5) C மட்டும் (………)

24) குறிப்பிட்ட பொருளாதாரம் ஒன்றின் சமநிலை வெளியீட்டினை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது. வருமானம் $Y_1$ ஆக இருக்கும் போது,




1) மொத்தக் கேள்வியை விட மொத்த நிரம்பல் உயர்வாக இருக்கும்.
2) உட்பாய்ச்சல்கள், வெளிப்பாய்ச்சல்களுக்கு சமன்.
3) மொத்த நிரம்பலை விட மொத்தக் கேள்வி உயர்வாக இருக்கும்.
4) பொருளாதாரத்தில் நிறைதொழில் மட்டம் காணப்படும்.
5) பணவீக்க இடைவெளி தோன்றும். (………)

25) மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றின் வருமானம் (Y) சராசரி சேமிப்பு நாட்டம் (APS) என்பவற்றைக் குறிப்பிடும் அட்டவணை வருமாறு.

| வருமானம் (y) | சராசரி சேமிப்பு நாட்டம் (APS) |
|---|---|
| 2000 | 0.2 |
| 4000 | 0.4 |

ஏனையவை மாறாத நிலையில் எல்லைநுகர்வு நாட்டத்தின் (MPC) பெறுமதி யாது?

1) 0.4 2) 0.4 3) 0.6 4) 0.25 5) 0.8 (………)

26) பின்வருவனவற்றுள் மொத்த உள்நாட்டு உற்பத்தியை வரைவிலக்கணப்படுத்தும் கூற்று எது?

1) தரப்பட்ட காலப்பகுதியொன்றின் பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் மொத்த வெளியீட்டின் அளவாகும்.
2) தரப்பட்ட காலப்பகுதியொன்றில் ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் எல்லா வெளியீடுகளினதும் சந்தைப் பெறுமதியாகும்.
3) தரப்பட்ட காலப்பகுதியொன்றில் ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் எல்லா முடிவுப் பொருட்கள் சேவைகளினதும் மொத்த சந்தைப் பெறுமதியாகும்.
4) தரப்பட்ட காலப்பகுதியொன்றில் உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட எல்லா முடிவுப் பொருட்கள் சேவைகளினதும் மொத்தப்பெறுமதி.
5) தரப்பட்ட காலப்பகுதியொன்றில் ஒரு பொருளாதாரத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட எல்லா முடிவுப் பொருட்கள் சேவைகளின் மொத்த சந்தைப் பெறுமதியிலிருந்து ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் சேவைகளின் சந்தைப் பெறுமதியைக் கழிக்க வரும் தொகையாகும். (………)

agaram.lk

27) எளிய பொருளாதாரம் ஒன்றின் C = 200 + 0.8 y எனவும், I = 100 m எனவும் தரப்படுமாயின், சமநிலைத்தேசிய வருமான மட்டத்தில் நுகர்வின் அளவு யாது?

1) 1000 m ரூபா 2) 1400 m ரூபா 3) 1500 m ரூபா
4) 1800 m ரூபா 5) 2000 m ரூபா (………)

28) மொத்தக் கேள்வி என்பதனால் கருதப்படுவது,

1) ஒரு கொடுக்கப்பட்ட வருமான மட்டத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மொத்தச் செலவீடு ஆகும்.
2) ஒரு கொடுக்கப்பட்ட விலையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மொத்தச் செலவீடு ஆகும்.

3) உள்நாட்டுக் கம்பனிகளால் உற்பத்தி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களுக்கான மொத்தக் கேள்வி ஆகும்.
4) நுகர்வோருடைய செலவீடு, அரச செலவீடு மற்றும் முதலீடு என்பவற்றின் மொத்தம் ஆகும்.
5) ஒரு நாட்டின் வதிவுள்ளவர்களால் பொருட்கள் மற்றும் சேவைகள் மீது மேற்கொள்ளப்பட் மொத்தக்கேள்வி ஆகும். (.........)

29) வணிக வங்கி ஒன்றின் ஐந்தொகையில் மிகவும் ஒரு இலாபகரமான ஒரு சொத்தாக அமையும் விடயம் எது?
1) முற்பணங்கள்
2) அழைப்புப் பணம்
3) வாடிக்கையாளரின் வைப்புக்கள்
4) வங்கியின் மூலதனம்
5) மத்திய வங்கியிலுள்ள வங்கிகளின் நிலுவைகள். (.........)

30) வணிக வங்கி ஒன்று காசு ஒதுக்கினைப் பேண வேண்டியிருப்பதற்கான காரணம்.
1) இலாபத் தன்மையைப் பேணுவதற்காக
2) அரசிற்கு கடன் தேவைப்படும் நிலைமைகளில் கடன்களை வழங்குவதற்காக
3) வைப்புக்களினின்றும் எழும் நாளாந்த காசுக்கான கேள்வியை சமாளிப்பதற்காக
4) தேசிய நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக.
5) கடன் தேவைப்படுவோருக்கு வழங்குவதற்காக. (.........)

31) வங்கி முறைமையொன்றின் கேள்வி வைப்புக்கள் ரூபா 2000 மில்லியானகவும் காசொதுக்குகள் ரூபா 200 மில்லியனாகவும் உள்ளது. மிகை ஒதுக்குகள் எவையும் இல்லை. நட்டின் பணநிரம்பல் ரூபா 3000 மில்லியனாக உள்ளது. தற்போது பொதுமக்கள் தம்மிடமுள்ள ரூபா 200 மில்லியனை வங்கி வைப்பில் இட்டால் பூரண கடனாக்கத்தின் பின்னர் பின்வருவனவற்றில் சரியான மட்டத்தைப் பிரதிபலிப்பது எது?

| | கேள்வி வைப்பு (ரூ.மில்லியன்) | பணநிரம்பல் (ரூ.மில்லியன்) |
|---|---|---|
| 1) | 2200 | 3800 |
| 2) | 3000 | 3800 |
| 3) | 4000 | 4800 |
| 4) | 4000 | 5000 |
| 5) | 5000 | 5800 |

(..........)

32) பின்வருவனவற்றுள் செலவுத் தூண்டல் பணவீக்கத்திற்குக் காரணமாக அமையக் கூடியது எது?
1) ஒரு வரவு செலவுத்திட்டம் பற்றாக்குறை.
2) நேர் வரிகளில் ஒரு குறைப்பு.
3) வங்கிக் கடன்களில் ஓர் அதிகரிப்பு.
4) இறக்குமதி மூலப் பொருட்களின் விலையில் ஓர் அதிகரிப்பு.
5) முதலீட்டுச் செலவில் ஓர் அதிகரிப்பு. (..........)

33) கேள்வித் தூண்டல் பணவீக்கத்தைக் குறைப்பதற்கு முயற்சிக்கும் ஓர் அரசாங்கம் மேற்கொள்ளக் கூடிய வழிமுறை அல்லாதது?
1) வட்டி வீதத்தைக் குறைத்தல்.
2) பெறுமதிசேர் வரியை அதிகரித்தல்.
3) வங்கிக் கடன்கள் மீதான கட்டுப்பாடுகளை அதிகரித்தல்.
4) அரச செலவீடுகளைக் குறைத்தல்.
5) நீண்ட கால முதலீடுகளைக் கட்டுப்படுத்தல். (..........)

34) பணத்தின் திரவத் தேர்வுக்கான மக்களின் பிரதான நோக்கம்?
1) கொடுக்கல் வாங்கல் நோக்கம்
2) பாதுகாப்பு நோக்கம்
3) வருமானத்தின் நிச்சயமற்ற தன்மை
4) உத்தேச நோக்கம்
5) வட்டி வருமானம் உழைக்கும் நோக்கம் (..........)

35) பின்வருவனவற்றுள் எது திரப்பட்ட விரிந்த பண நிரம்பலைச் சரியாக வெளிப்படுத்துகின்றது?

1) பொதுமக்களின் வசமுள்ள நாணயத்தின் பெறுமதி + வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் வைத்திருக்கும் கேள்வி வைப்புக்கள்.
2) பொதுமக்களின் வசமுள்ள நாணயத்தின் பெறுமதி + வர்த்தக வங்கிகளில் பொதுமக்களின் பெயரிலுள்ள கேள்வி சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்கள்.
3) விரிந்த பணநிரம்பல் $(M_2)$ + வெளிநாட்டு நாணய வைப்புக்களிலுள்ள மீதிகளின் பெறுமானம்.
4) விரிந்த பணநிரம்பல் + வதியும் இலங்கையரல்லாதோரின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள்.
5) குறுகிய பணநிரம்பல் $(M_1)$ + வெளிநாட்டு நாணய வைப்புக்களிலுள்ள மீதிகளின் பெறுமானம்.

(……….)

36) “திரவப பொறிநிலை” என்பதனால் கருதப்படுவது,

1) அதி உயரிய நிலையிலான வட்டிவீதத்தில் பணத்திற்கான கேள்வி.
2) அதி தாழ்ந்த வட்டிவீதத்தில் பணத்திற்கான கேள்வி.
3) வட்டிவீத அதிகரிப்பால் பணத்தின் கேள்வி குறையும் நிலை.
4) வட்டிவீதம் குறையும் போது பணத்தின் கேள்வி குறையும் நிலை.
5) வட்டிவீதம் எவ்வாறு மாறினாலும் பணத்தின் கேள்வி மாறாத நிலை. (……….)

37) மத்தியவங்கி தரகு நிறுவனம் ஒன்றிடமிருந்து 200000/= பெறுமதியான பிணைகளைக் கொள்வனவு செய்கின்றது. இப்பணத்தை நிறுவனம் வணிகவங்கி ஒன்றில் வைப்பில் இடுகின்றது. காசொதுக்கு வீதம் 10% ஆகும். மிகை ஒதுக்கு எதுவுமில்லை. வணிக வங்கியானது வழங்கக்கூடிய உச்சகடன் எவ்வளவு?

1) 2000000/= 2) 180000/= 3) 220000/= 4) 350000/= 5) 330000/= (……….)

38) வணிக வங்கியொன்று 5000 ரூபா மிகை ஒதுக்குகளையும் 50000 ரூபா கேள்வி வைப்புக்களையும் கொண்டிருப்பதாகக் கருதுக. ஒதுக்கு விகிதம் 10% ஆயின் வங்கியிடமுள்ள உண்மையான பண ஒதுக்கின் அளவு யாது?

1) ரூபா 5000 2) ரூபா 6000 3) ரூபா 10000
4) ரூபா 8000 5) ரூபா 15000 (……….)

39) குறிப்பிட்ட பொருளாதாரமொன்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4000 அலகுகளாகவும் சராசரி விலைமட்டம் அலகொன்றிற்கு 5 ரூபாவாகவும் பணநிரம்பலின் அளவு 2000 ரூபாவாகவும் இருப்பின் பணத்தின் சுற்றோட்ட வேகம் யாது?

1) $v = 8$ 2) $v = 15$ 3) $v = 20$ 4) $v = 10$ 5) $v = 16$ (……….)

40) பின்வருவனவற்றுள் பொது வளமாகக் கருதப்படக் கூடியது,

1) கல்வி 2) கிராமிய வீதிகள் 3) அறிவு
4) கடலில் உள்ள மீன்கள் 5) போதைவஸ்து (……….)

41) சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் மீதான அரச தலையீட்டுக்கான நேரடி நியாயக் காரணியாக கருத முடியாதது எது?

1) பொதுப்பண்டங்களை வழங்குதல். 2) சமூக நீதியைப் பேணுதல்
3) வெளிவாரிகள் மீதான தலையீடு. 4) உட்கட்டுமானங்களை வழங்குதல்.
5) சனத்தொகைப் பெருக்கத்தைக் குறைத்தல். (……….)

42) உற்பத்தி நடவடிக்கையால் ஏற்பட்ட வெளிவாரிச் செலவுக்குச் சமமாக அரசாங்கம் நிறுவனத்தின் மீது வரிவிதிக்குமாயின் அதன் விளைவு.

1) உயர்ந்த செலவை ஈடுசெய்வதற்காக நிறுவனம் தனது வெளியீட்டை அதிகரிக்கும்.
2) உற்பத்தியும் வள ஒதுக்கீடும் மாறாது.
3) நிறுவனத்தின் தனிப்பட்ட செலவிற்கும் சமூக நலச் செலவிற்கும் இடையிலான இடைவெளியை வரி அதிகரிக்கச் செய்யும்.
4) செலவு நலன்கள் அடிப்படையில் விலை அசைவதனால் வள ஒதுக்கீட்டில் முன்னேற்றம் உண்டாகும்.
5) வள ஒதுக்கீடு செயற்றிறன் அற்றதாக மாற்றமடையும். (……….)

43) பொதுவாக பொருட்களின் நுகர்வின் போது எதிர்க்கக்கூடிய வெளிவாரித் தாக்கங்கள் ஏற்படுவதற்கான காரணம்.

1) விலை அறவிடப்படாமையாகும். 2) அதிக நுகர்வினாலாகும்.
3) உற்பத்தி செலவின்மையாலாகும். 4) அறியாமையாலாகும்.
5) போட்டித்தன்மை காரணமாகும். (……….)

agaram.lk

44) வரவு செலவுத் திட்டத்தின் "வெளித்தள்ளும் விளைவு" பின்வருவனவற்றுள் எதனை வீழ்ச்சிக்குக் காரணமாகும்.
1) அரச செலவீடு 2) தனியார் முதலீடு 3) வட்டி வீதங்கள்
4) ஏற்றுமதிக்கான கேள்வி 5) வரி வருமானங்கள் (……….)

45) வரிகள் தொடர்பான "நிலைக்குத்து சமத்துவம்" என்பது.
1) அனைவரும் சம அளவு வரி செலுத்துதல்.
2) சமமான இயலுமையைக் கொண்டிருப்போர் மீது சமமான வரி அறவீடு.
3) வேறுபட்ட வருமான செலவுப் பின்னணியைக் கொண்டிருப்போர் மீது வேறுபட்ட வரி வீதத்தை அறவிடுதல்.
4) மிகக் குறைந்த மட்டத்தில் வரிகள் காணப்படல் வேண்டும்.
5) மிக உயர்ந்த மட்டத்தில் வரிகள் காணப்படல் வேண்டும். (……….)

46) சர்வதேச வர்த்தகம் தொடர்பாக "முழுநயம்" என்ற எண்ணக்கரு விளக்குவது யாதெனில்,
1) சமஅளவு உள்ளீடுகள் உள்ள நிலையில் குறிப்பிட்ட நாடு மற்றைய நாட்டை விட குறிப்பிட்ட பொருள் உற்பத்தியில் அதிக வெளியீட்டைப் பெறுதல்.
2) சமஅளவு உள்ளீடுகள் உள்ள நிலையில் குறிப்பிட்ட நாடு மற்றைய நாட்டை விட குறிப்பிட்ட பொருள் உற்பத்தியில் குறைந்தளவு வெளியீட்டைப் பெறுதல்.
3) சமஅளவு உள்ளீட்டின் மூலம் இரு நாடும் சமஅளவு வெளியீட்டைப் பெறுதல்.
4) குறித்த நாடு மற்றைய நாட்டை விட குறைந்த நேரத்தில் குறைந்த வெளியீட்டைப் பெறுதல்.
5) குறித்த நாடு மற்றைய நாட்டை விட அதிக மணித்தியாலத்தில் அதிக வெளியீட்டைப் பெறுதல். (……….)

47) A மற்றும் B ஆகிய நாடுகள் சமமான வள அலகுகொன்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய புடவை மற்றும் கோதுமை என்பவற்றின் வெளியீட்டளவுகள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| | நாடு A | நாடு B |
|---|---|---|
| புடவை (மீற்றர்)<br>கோதுமை (கிலோமீற்றர்) | 50<br>60 | 40<br>60 |

மேற்படி தரவுகளின் படி செலவு அடிப்படையிலான நன்மை தொடர்பில் சரியான தன்மையினை வெளிப்படுத்தும் கூற்று யாது?
1) புடவை உற்பத்தியில் முழு தன்மையினை B நாடு கொண்டுள்ளது.
2) கோதுமை உற்பத்தியில் முழு தன்மையினை B நாடு கொண்டுள்ளது.
3) புடவை உற்பத்தியின் ஒப்பீட்டு நன்மையினை A நாடு கொண்டுள்ளது.
4) கோதுமை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையினை A நாடு கொண்டுள்ளது.
5) புடவை உற்பத்தியின் ஒப்பீட்டு நன்மை எந்த ஒரு நாட்டுக்கும் இல்லை. (……….)

48) ஒரு நாட்டின் வர்த்தகமாற்று வீதம் சிறப்படையுமாயின் அந்நாட்டின்,
1) ஏற்றுமதிகளின் அளவை விட இறக்குமதிகளின் அளவு துரிதமாக வீழ்ச்சியடையும்.
2) இறக்குமதிகளின் பெறுமதியை விட ஏற்றுமதிகளின் பெறுமதி துரிதமாக அதிகரிக்கும்.
3) செ்மதி நிலுவை கட்டாயமாக முன்னேற்றமடையும்.
4) குறித்தளவு இறக்குமதிகளைக் கொள்வனவு செய்வதற்கு குறைந்தளவு பொருட்களையே ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கும்.
5) சுதேச ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டுக் கேள்வி அதிகரிக்கும். (……….)

49) இடைநிலைப் பண்டங்களின் இறக்குமதி உள்ளடக்கமாக இனங்காணப்படும் தொகுதி எது?
1) வடிக்கப்படாத எண்ணெய், இயந்திரங்கள், கட்டிடப் பொருட்கள்.
2) உரம், இரசாயனப் பண்டங்கள், கனிய எண்ணெய்.
3) போக்குவரத்துச் சாதனங்கள், கட்டிடப் பொருட்கள்.
4) புடவை, தேயிலை, பால்மா பக்கற்றுக்கள்.
5) மின்சார உபகரணங்கள், அரிசி, மோட்டார் வாகனங்கள். (……….)

50) இலங்கையானது ஆடை உற்பத்தியில் மற்றைய உற்பத்திகளை விட முன்னிலையில் உள்ளது. U.S.A (ஐக்கிய அமெரிக்கா) வுடன் தொடர்புபடுத்தும் போது ஆடை உற்பத்தி இலங்கைக்கு நயமானதாகும். இதற்கான பொருளியல் ரீதியான கருத்து யாது? இலங்கையில்.
1) உயர்ந்த உற்பத்தித்திறன் காணப்படல் 2) புவியியல் அமைவிடம்
3) ஊழியத்திற்கான விலை உயர்வு 4) மூலதனச் செறிவு அதிகம்
5) ஊழியச் செறிவு அதிகம் (……….)

agaram.lk

**வடமாகாணக்கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019

## Term Examination, March - 2019

FWC

| தரம் :- 13 (2019) | 21 | TI | பொருளியல் - II | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|---|---|

### பகுதி II

**அறிவுறுத்தல்கள்**

❖ **உபபிரிவு "அ" உபபிரிவு "ஆ" ஆகியவற்றிலிருந்து குறைந்த பட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடைதரு.**

**உப பிரிவு "அ"**
**(இப்பிரிவிலிருந்து குறைந்த பட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க.)**

1) i. அடிப்படைப் பொருளாதாரம் பிரச்சினைகள் யாவும் தெரிவுப் பிரச்சினைகளாகும். இக் கூற்றினை விளக்குக. (4 புள்ளிகள்)

ii. ஓர் உற்பத்திக் காரணி என்ற வகையில் முயற்சியாண்மையானது. உழைப்பிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது. (4 புள்ளிகள்)

iii. வளங்களை ஒதுக்கீடு செய்யும் ஒரு வழி என்ற வகையில் விலைப்பொறிமுறையின் பிரதான குறைபாடுகளை பரிசீலிக்குக? (4 புள்ளிகள்)

iv. அதிகரித்துச் செல்லும் அமையச் செலவிலான உற்பத்திச் சாத்திய வளையிகள் மூலம் பின்வரும் நிகழ்வுகளைக் குறித்துக் காட்டுக.
அ) சிறப்புப் பயிற்சி பெற்ற தொழிலாளர் வளம் குடியகழ்தல்.
ஆ) சிறந்த விளைச்சல் தரும் புதிய வகை பசளை இனம் கண்டுபிடிப்பு. (4 புள்ளிகள்)

v. நுகர்வுப் பொருள் உற்பத்திக்காக ஒதுக்கப்பட்ட வளங்களில் ஒரு பகுதி முதலீட்டுப் பொருள் உற்பத்திக்கு ஒதுக்கப்படலானது எத்தகைய விளைவினை ஏற்படுத்தும் என்பதனை பொருளியல் ரீதியாக விளக்குக. (4 புள்ளிகள்)

2) i. கேள்வித் தொழிற்பாட்டிற்கும் கேள்வி விதிக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக. (3 புள்ளிகள்)

ii. நிரம்பல் கோட்டினை இடப்புறம் நகர்த்தும் காரணிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. பின்வரும் சமன்பாடுகள் பொருளொன்றின் சந்தைக்கேள்வி மற்றும் நிரம்பல் சார்புகளை விபரிக்கின்றது.

$Qd = 260 - 20P$

$Qs = -140 + 20P$ (4 புள்ளிகள்)

i. சமநிலை விலை சமநிலைத் தொகை யாது? (2 புள்ளிகள்)

ii. அரசு 4 ரூபாவினை அலகு வரியாக விதிக்குமாயின் வரிக்குப் பின்னரான சமநிலை விலை சமநிலைத் தொகை யாது? (2 புள்ளிகள்)

iii. வரியின் காரணமாக நுகர்வோன் செலுத்தும் விலை யாது? (1 புள்ளிகள்)

iv. வரியின் காரணமாக அரசுக்குக் கிடைக்கும் மொத்த வரி வருமானம் யாது? (1 புள்ளிகள்)

v. வரிக்குப் பின்னரான நுகர்வோன் மிகை இழப்பு யாது? (2 புள்ளிகள்)

vi. வரியினால் ஏற்பட்ட சமூகநலன் இழப்பின் அளவு யாது? (2 புள்ளிகள்)

vi. கேள்விக்கோடு ஒன்றின் புள்ளி நெகிழ்ச்சி, வில் நெகிழ்ச்சி என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக. (4 புள்ளிகள்)

agaram.lk

3) i. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி, அளவுத்திட்ட விளைவு விதி என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

ii. அளவுத்திட்ட சிக்கனங்கள் என்றால் என்ன? அவை ஏற்படுவதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

iii. நிறைபோட்டி நிறுவனம் ஒன்றினது 200 அலகு வெளியீட்டின் போது எல்லைச் செலவு 40 ரூபாவாகும். சராசரி மாறும் செலவு 16 ரூபாவாகவும் மொத்த நிலையான செலவு 1200 ரூபாவாகவும் உள்ளது. எனின்,

அ) மொத்தச் செலவு யாது? (2 புள்ளிகள்)

ஆ) மொத்தப் பொருளியல் இலாபம் யாது? (2 புள்ளிகள்)

iv. நிறைபோட்டிச் சந்தையில் இருந்து தனியுரிமைப் போட்டியினை வேறுபடுத்துகின்ற மிகப் பிரதான இயல்புகள் யாவை? (4 புள்ளிகள்)

v. நிறைபோட்டிவ் சந்தையில் இயங்கும் நிறுவனம் ஒன்று குறுங்காலத்தில் உற்பத்தியை மூடவேண்டிய சந்தர்ப்பத்தினை வரைபட உதவியுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

4) i. தேசிய உற்பத்தி கணிப்பீட்டு அணுகுமுறையின் அடிப்படையில் ஏற்படும் "பல்கணிப்பீட்டு" பிரச்சினை என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? இதனைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் முறைகள் எவை? (4 புள்ளிகள்)

ii. தேசிய உற்பத்தி வழிமுறையின் அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடும் பேது பயன்படுத்தப்படும் "அடிப்படை விலை" "உற்பத்தியாளர் விலை" என்பவற்றினை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

iii. பேரினப் பொருளாதாரம் தொடர்பான இலங்கையின் 2018 ஆம் ஆண்டுக்கான கருதுகோள் ரீதியான பின்வரும் தரவுகள் தரப்படுகின்றன. (பெறுமதிகள் யாவும் மில்லியன் ரூபாவில்)

| விபரம் | பெறுமதி |
|---|---|
| ஊழியர்களின் நட்ட ஈடு | 3000 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 5000 |
| கல்பு வருமானங்கள் | 700 |
| நிலையான மூலதன நுகர்வு | 800 |
| உற்பத்தி மீதான உதவுதொகைகள் கழித்த ஏனைய வரிகள் | 200 |
| உற்பத்தி மீதான உதவு தொகைகள் கழித்த வரிகள் | 1000 |
| உலகம் முழுவதிலிருந்தான தேறிய முதன்மை | - 300 |
| வீட்டுத்துறைக்கான அரச மாற்றல் | 100 |
| பகிரப்படாத இலாபம் | 50 |
| கம்பனி இலாப வரிகள் | 40 |
| துனியார் வருமான வரிகள் | 80 |

மேற்படி தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

i. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி.

ii. சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்.

iii. தனியார் வருமானம்.

iv. செலவிடக் கூடிய தனியார் வருமானம். (8 புள்ளிகள்)

iv. தேசிய வருமானத் தரவுகளின் பிரதான பயன்பாடுகளைக் குறிப்பிக. (4 புள்ளிகள்)

agaram.lk

5) i. அரச துறைகள் மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றில் மொத்தக்கேள்வி அதிகரிக்ககூடிய சந்தர்ப்பங்கள் எவை? (3 புள்ளிகள்)

ii. பொருளாதாரமொன்றின் ரூபா 3000 செலவிடத்தக்க வருமானம் உள்ளபோது சராசரி சேமிப்பு நாட்டம் (APS) 0.1 எனவும் ரூபா 6000 செலவிடத்தக்க வருமானத்தில் சராசரி சேமிப்பு நாட்டம் (APS) 0.15 எனவும் தரப்படுகின்றது.

அ) வருமானம் நுகர்வு என்பவற்றை அட்டவணைப்படுத்துக. (3 புள்ளிகள்)

ஆ) பொருளாதாரத்தில் நுகர்வுச் சார்பினையும் சேமிப்புச் சார்பினையும் தருக? (4 புள்ளிகள்)

தனியார் முதலீடு ரூபா 100 ஆகவும் அரசாங்கக் கொள்வனவுகள் ரூபா 50 ஆகவும் அமைகின்றது எனக் கருதுக.

இ) சமநிலை வெளியீட்டு மட்டம் யாது? (2 புள்ளிகள்)

ஈ) சமநிலை வருமான மட்டத்திற் நுகர்வு, சேமிப்பு யாது? (2 புள்ளிகள்)

iii. எல்லை நுகர்வு நாட்டம் (MPC) எல்லை சேமிப்பு நாட்டம் (MPS) முதலீட்டுப் பெருக்கி ($K_I$) என்பவற்றை விளக்கி அவற்றுக்கிடையிலான தொடர்புகளையும் ஆராய்க? (4 புள்ளிகள்)

**உபபிரிவு "ஆ"**

**(இப்பிரிவிலிருந்து குறைந்த பட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க.)**

6) i. இலங்கையில் தற்போது விலை மட்ட மாற்றங்களை அளவிடப் பயன்படுத்தப்படும் அளவைகள் எவை? (3 புள்ளிகள்)

ii. "கிட்டிய பணம்" என்றால் என்ன? இவற்றிலிருந்து பணப் பிரதியீடுகள் எவ்வாறு வேறுபடுகின்றன உதாரணம் மூலம் விளக்குக? (4 புள்ளிகள்)

iii. பணத்தின் "திரவத்தன்மை" "திரவத்தேர்வு முன்னுரிமை" மற்றும் "திரவப் பொறிநிலை" என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

iv. "பண நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பானது பணவீக்கத்திலும் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்ற கூற்றினை ஏற்பீரா? காரணம் தருக? (4 புள்ளிகள்)

v. ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($M_2b$) விரிந்த பண நிரம்பல் (M4) என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக. (5 புள்ளிகள்)

agaram.lk

7) i. இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்கள் எவை எனக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக. (4 புள்ளிகள்)

ii. பணச்சந்தை என்றால் என்ன? அதன் உபபிரிவுகள் எவை? (4 புள்ளிகள்)

iii. வணிக வங்கி தொழில் முறைமையொன்று ரூபா 50 மில்லியன் வைப்புக்களையும் ரூபா 6 மில்லியன் ஒதுக்குகளையும் வைத்திருப்பதாகக் கருதுக. சட்டப்படியான ஒதுக்கு வீதம் 10% மாக தரப்படுமிடத்து பண நிரம்பலில் சாத்தியமான மேலதிக விரிவின் உச்ச அளவு யாது? (2 புள்ளிகள்)

iv. வணிக வங்கிக் கட்டமைப்பிலுள்ள குறிப்பிட்ட வங்கியிடம் ரூபா 400 மில்லியன் ஒதுக்குகளும் ரூபா 3500 மில்லியன் வங்கி வைப்புக்களும் காணப்படுகின்றன. இந்நிலையில் வங்கி வாடிக்கையாளர் ஒருவர் ரூபா 100 மில்லியன் புழக்கப் பணத்தை அவ்வங்கியில் வைப்பில் இருவராயின் நியதி ஒதுக்கு வீதம் 10 % மாக உள்ள நிலையில் அவ்வைப்பின் பின் பின்னர்.

i) வங்கியின் புதிய இருப்பு நிலைக்குறிப்பு எவ்வாறு காணப்படும்? (2 புள்ளிகள்)

ii) வங்கியிடமுள்ள மிகை ஒதுக்கின் அளவு யாது? (2 புள்ளிகள்)

iii) வணிக வங்கிகளின் கடனாக்கத்தை நிர்ணயிக்கும் காரணிகள் எவை? (1 புள்ளிகள்)

v. மத்திய வங்கியின் தொகைக் கடன் கட்டுப்பாட்டு கருவிகளையும் பண்பு ரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளையும் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

8) i. மேன்மைப் பண்டங்களையும் தீங்கிழைக்கும் பண்டங்களையும் உதாரணங்கள் மூலம் வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

ii. சந்தைத் தோல்வி, அரசாங்கத் தோல்வி என்ற எண்ணக்கருக்களை விளக்கி அவற்றின் தோல்விக்கான காரணிகளையும் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

iii. வெளிவாரி விளைவுகளினூடாக இடம் பெறும் வெளிவாரிச் சிக்கனங்கள், சிக்கனமின்மைகள் என்பவற்றை உதாரணம் மூலம் விளக்குக. (4 புள்ளிகள்)

iv. பண்டமொன்றின் உற்பத்தியில் தனியார் செலவிலும் பார்க்க சமூகச் செலவுகள் குறைவாகவுள்ளது. இத்தகைய ஓர் நிலைமையில் சந்தை முறையை எவ்வாறு தொழிற்படும் என்பதை வரைபடம் மூலம் விளக்குக. (4 புள்ளிகள்)

v. இத்தகைய சந்தர்ப்பங்களில் சாதன ஒதுக்கீட்டை வினைத்திறனாக மேற்கொள்ள அரசு எவ்வழிகளில் தலையீடு செய்யலாம்? (3 புள்ளிகள்)

9) i. "இறைக் கொள்கை" என்பதனால் கருதப்படுவது யாது? இறைக் கொள்கை கருவிகள் எவை? (4 புள்ளிகள்)

ii. இலங்கையின் அரச வரவு செலவுத்திட்டத்தில் கணிப்பிடப்படும் முதன்மை கணக்கு மீதி, தேறிய பணக்குறை என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

iii. "பாதீட்டுக் குறை நிலையானது எல்லாச் சந்தர்ப்பங்களினதும் ஒரு நாட்டின் பண நிரம்பலை அதிகரிக்கச் செய்யும்" இக்கூற்றினை ஏற்பீரா? உமது விடைக்கான காரணங்கள் தருக? (4 புள்ளிகள்)

iv. இலங்கை அரசின் வரியில்லா வருமானங்களில் அடங்கும் விடயங்கள் எவை? (4 புள்ளிகள்)

v. அரசாங்க பாதீடு ஒன்றில் இடம்பெறும் மீண்டெழும் செலவுகள், நடப்பு மாற்றல்கள் என்பவற்றை வேறுபடுத்தி இவற்றின் கீழ் உள்ளடக்கப்படும் விடயங்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

10) i. முழு நன்மை, ஒப்பீட்டு நன்மை என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

ii. ஒப்பீட்டு நயத்தை தீர்மானிக்கும் பிரதான காரணிகள் எவை? (4 புள்ளிகள்)

iii. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஓரலகு உள்ளீட்டின் மூலம் வானொலி, கணிணி என்பவற்றின் உற்பத்தியில் பெற்றுக் கொள்ளும் வெளியீட்டின் அளவை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| பொருள் | இந்தியா | பாகிஸ்தான் |
|---|---|---|
| வானொலி | 50 | 20 |
| கணிணி | 40 | 40 |

அ. இரு நாடுகளினதும் சாத்திய வளையிகளை வரைக. (2 புள்ளிகள்)

ஆ. ஒவ்வொரு நாடும் எப்பொருட்களின் உற்பத்தியில் முழு நன்மையைக் கொண்டுள்ளது? காரணம் தருக. (2 புள்ளிகள்)

இ. வானொலி உற்பத்தியில் எந்த நாடு ஒப்பீட்டு நயத்தைக் கொண்டுள்ளது? (1 புள்ளிகள்)

ஈ. கணிணி உற்பத்தியில் எந்த நாடு ஒப்பீடு நயத்தைக் கொண்டுள்ளது. (1 புள்ளிகள்)

உ. இரு நாடுகளுக்கும் நன்மையளிக்கும் விகிதமாக 1 வானொலிக்கு 1 கணிணி என்ற அடிப்படையில் ஒப்பீட்டு நன்மை கொண்ட பண்டத்தை பரிமாற்றம் செய்வதன் மூலம் அடையப்படும் நுகர்வுக் கோடுகளை சாத்திய வளையியில் காட்டுக? (2 புள்ளிகள்)

ஊ. இரு நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட முன்னர் உள்நாட்டு பரிமாற்று விகிதம் எவ்வாறு காணப்படும்? (2 புள்ளிகள்)

எ. சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்ட பின்னர் இருநாடுகளினதும் பரிமாற்று விகிதம் எவ்வாறு காணப்படும்? (2 புள்ளிகள்)

agaram.lk